# 08 பரமார்த்த குருவும் சீடர்களும்





ஓர் ஊரில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவனது பெயர் சியதோரிஸ். அவன் நல்ல மனிதன். என்றாலும், அவன் ஒரு பெரிய மூடன். சியதோரிஸ் ஓர் ஆடு வளர்த்தான்.



ஒரு நாள் இந்த ஆடு தண்ணீர் குடிக்க நினைத்தது. ஆடு தண்ணீர் குடிக்கப் பானையுள் தனது தலையைப் போட்டது. பானையின் வாய் சிறியது. ஆகையால் ஆட்டினது தலை அதில் இறுகிக் கொண்டது. தலையை வெளியே எடுக்க முடியாமல் ஆடு மிகவும் சிரமப்பட்டது.



சியதோரிஸ் இதைக் கண்டு மிகவும் துக்கப்பட்டான். ஆட்டின் தலையைப் பானையில் இருந்து வெளியே எடுக்க மிகவும் முயற்சி செய்தான். என்றாலும் அவனால் முடியவில்லை.



குடியானவன் பரமார்த்த குருவிடம் ஓடிப் போய் இதைப் பற்றிச் சொன்னான். பரமார்த்த குருவும் யானையின் மீது அவ்விடத்திற்கு வந்தார். அவருடன் சீடர்களும் வந்தார்கள்.



குரு ஆட்டை நன்றாகப் பார்த்தார். வெகு நேரம் யோசனை செய்தார். ஆட்டின் கழுத்தை வெட்டும்படி சொன்னார்.

சீடர்கள் ஆட்டின் கழுத்தை வெட்டினார்கள். ஆடு இறந்து விட்டது.

பின்பு பானையை நொறுக்கும்படி சொன்னார். சீடர்கள் பானையையும் நொறுக்கினர்கள்.

**சொல் அறிமுகம்**
වදන් පෙළ

| | | |
|---|---|---|
| குடியானவன் | - | ගමරාළ |
| மூடன் | - | මෝඩයා |
| ஆட்டினது | - | එළුවාගේ |
| வெளியே | - | පිටතට |
| முயற்சி | - | උත්සාහය |
| நன்றாக | - | හොඳින් |
| நொறுக்கினார் | - | පොඩිකළේය |
| சிறியது | - | කුඩාය |
| வளர் | - | ඇතිකරන්න |
| மனிதன் | - | මිනිසා |



**செயற்பாடு 1**
ක්‍රියාකාරකම 1

*அடைப்புக்குறிக்குள் உள்ள சரியான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.*
**වරහන් තුළ ඇති සුදුසු වචනය තෝරා යටින් ඉරක් අඳින්න.**

01. *சியதோரிஸ் ஒரு (கெட்ட, நல்ல) மனிதன்.*

02. *சியதோரிஸ் ஒரு (மாடு, ஆடு) வளர்த்தான்.*

03. *ஆட்டின் (கால், தலை) இறுகிக் கொண்டது.*

04. *பரமார்த்த குரு (யானை, குதிரை) மேல் வந்தார்.*

05. *சீடர்கள் ஆட்டின் (கழுத்தை, கால்) வெட்டினார்கள்.*

## செயற்பாடு 2
## ක්‍රියාකාරකම 2

பின்வரும் பந்தியின் உச்சரிப்பை சிங்கள மொழியில் எழுதுங்கள்.
**පහත සඳහන් ඡේදයේ උච්චාරණය සිංහලෙන් ලියන්න.**

ஒரு நாள் இந்த ஆடு தண்ணீர் குடிக்க நினைத்தது. ஆடு தண்ணீர் குடிக்க பானையுள் தனது தலையை போட்டது. பானையின் வாய் சிறியது. ஆகையால் ஆட்டினது தலை இறுகிக் கொண்டது. தலையை வெளியே எடுக்க முடியாமல் ஆடு மிகவும் சிரமப்பட்டது.

## செயற்பாடு 3
## ක්‍රියාකාරකම 3

பின்வரும் வாக்கியங்களின் சிங்களக் கருத்தை எழுதுங்கள்.
**පහත සඳහන් වාක්‍යවල සිංහල අර්ථය ලියන්න.**

01. ஆடு இறந்து விட்டது.

02. பின்பு பானையை நொறுக்கும்படி சொன்னார்.

_______________________________________________

03. பரமார்த்த குரு ஆட்டின் கழுத்தை வெட்டும்படி சொன்னார்.

_______________________________________________

04. குடியானவன் இதைக் கண்டு மிகவும் துக்கப்பட்டான்.

_______________________________________________

05. என்றாலும் அவனால் முடியவில்லை.

_______________________________________________



## செயற்பாடு 4
## ක්‍රියාකාරකම 4

பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்குக.

**පහත සඳහන් වචන උපයෝගී කරගෙන වාක්‍ය සකසන්න.**

01. ஆடு - _______________________________________________
02. மனிதன் - _______________________________________________
03. சிறியது - _______________________________________________
04. நன்றாக - _______________________________________________
05. வெளியே - _______________________________________________
06. மூடன் - _______________________________________________
07. தண்ணீர் - _______________________________________________
08. பெயர் - _______________________________________________
09. நல்ல - _______________________________________________
10. அங்கும் இங்கும் - _______________________________________________



### செயற்பாடு 5
### ක්‍රියාකාරකම 5

**பாடத்தை வாசித்து பின்வரும் பந்தியைப் பூரணப்படுத்துங்கள்.**
**පාඩම කියවා පහත ඡේදය සම්පූර්ණ කරන්න.**

சியதோரிஸ் __________ கண்டு மிகத் துக்கப்பட்டான். __________தலையைப் பானையில் இருந்து வெளியே __________ முயற்சி __________என்றாலும் அவனால் முடியவில்லை. குடியானவன் பரமார்த்த __________ ஓடிப் போய் இதைப் __________ சொன்னான். பரமார்த்த குரு __________ மேல் வந்தார். சீடர்களும் அவருடன் __________ வந்தார்கள்.



### செயற்பாடு 6
### ක්‍රියාකාරකම 6

**பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 50 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதுங்கள்.**
**පහත සඳහන් මාතෘකා යටතේ වචන 50 ක රචනාවක් ලියන්න.**

01. எனது தாத்தா
02. எனது ஊர்
03. நான்
04. எனது செல்லப் பிராணி
05. எமது பூந்தோட்டம்